செ.வெ.எண் 12 நாள்: 07.09.2020

## பெரம்பலூர் மாவட்டம்

## உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் ஆலோசனைக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின் ஆலோசனைக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.09.2020) நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 6300 உணவு வணிகர்களில் 1387 அரசு சார்ந்த உணவு வணிகர்களும், 4913 தனியார் உணவு வணிகர்களும் உள்ளனர். இவர்களில் 1315 வணிகர்கள் அரசு சார்ந்த உரிமம்/பதிவுச் சான்றிதழும், 4246 வணிகர்கள் தனியார் உணவு உரிமம்/பதிவுச் சான்றிதழும் என மொத்தம் 5561 வணிகர்கள் உணவு பாதுகாப்பு துறை உரிமம் பெற்றுள்ளனர்.

உணவு நஞ்சாதல் மற்றும் உணவு பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் எந்தவொரு நிகழ்வினையும் உடனடியாக அந்தந்த வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு தெரியப்படுத்தவும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவு, உணவு பாதுகாப்பு உரிமம் பெற்ற உணவகங்களிலிருந்து பெற்று தரமாக வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையாக அனைத்து உணவு வணிக நிறுவனங்களிலும் சமூக இடைவெளி கடைப்பிடித்தல் வேண்டும். பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிவதை உறுதி செய்ய வேண்டும். உணவு வணிக நிறுவனங்கள் தினமும் 2 முறை கிருமிநாசினி கொண்டு வளாகத்தினை சுத்தம் செய்யவேண்டும். பணியாளர்கள் அனைவரும் கிருமிநாசினி கொண்டு, கைகளை சுத்தம் செய்யவேண்டும். உணவு வணிக நிறுவனங்களில் கை கழுவும் இடம் மற்றும் நுழைவு வாயிலில் கிருமிநாசினி வைத்தல் வேண்டும்.

மேலும் கடந்த மே-2020-ல் 35 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு, 12 கடைகளில் விற்கப்பட்ட 6.50 கிலோவும், ஜுன் 2020-ல் 36 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு 15 கடைகளில் 8.32 கிலோவும், ஜுலை 2020-ல் 30 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு 16 கடைகளில் 7.76 கிலோவும், ஆகஸ்ட் 2020-ல் 25 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டு, 12 கடைகளில் 4.65 கிலோவும் என மொத்தம் 27.23 கிலோ பான் மசாலா, குட்கா பொருட்கள் கடந்த 4 மாதங்களில் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், உணவுப்பொருட்கள் கலப்படம் மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை தொடர்பாக ஏதேனும் புகார்கள் இருந்தால் மாவட்ட நியமன அலுவலக தொலைபேசி எண் 04328-224033 என்ற எண்ணிலும், 9444042322 என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் மூலமாகவும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மரு.சௌமியா சுந்தரி, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சீனிவாசன்(பெரம்பலூர் நகராட்சி), ரத்தினம்(வேப்பந்தட்டை), இளங்கோவன்(வேப்பூர்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**